Crl.Misc.39
DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, COURT, ANNUR
Case No.C.C.No. 101 /2024

Deposition of witness for Prosecution P.W.2 Date : 27.06.2025

| | | | |
|---|---|---|---|
| Name : | கிட்டுச்சாமி | Village : | தொட்டியபாளையம் |
| Father's Name : | ரங்கன் | Taluk : | அன்னூர் |
| Age : | 40 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 27th day of June 2025 **(Accused Present)**

**சாட்சி அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு முதல் விசாரணை.**

நான் தற்போது தொட்டியபாளையத்தில் குடியிருந்து லைன்மேனாக வேலை செய்து வருகிறேன். இந்த வழக்கு விபத்தினை நான் நேரில் பார்த்தேன். சுமார் 3 வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் இரவு சுமார் 7 மணியளவில் ரோட்டில் அ.சா.1ன் தாயார் நடந்து வந்து கொண்டிருந்தார். ஆஜர் எதிரி அந்த பாட்டிக்கு பின்னால் இருசக்கர வாகனத்தில் சென்று மோதிவிட்டார். நான் முதலில் சென்று அந்த பாட்டியை துாக்கிவிட்டேன். பின்னர் வீட்டில் இருந்த அவர் பேரன் ஓடி வந்தார். விபத்து நடந்த போதே நான் நேரில் பார்த்தேன். மேற்கிருந்து தெற்காக எதிரி வாகனத்தினை ஓட்டி வந்த போது பாட்டி ஓரமாக நடந்த போனார். ஆஜர் எதிரி வாகனத்தினை நிதானமாக ஓட்டி வந்த போதும் ஓரமாக சென்ற பாட்டி மீது மோதிவிட்டார். இருசக்கர வாகனத்தில் வந்த எதிரி தான் வாகன விபத்திற்கு காரணமாவார். இவ்வழக்கு விபத்து தொடர்பாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

நான் கோவில்பாளையத்தில் லைன் மேனாக உதவி செய்து வருகிறேன். அரசு ஊழியர் இல்லை. சம்பவம் நடந்த இடத்தின் அருகே அந்த தேதியில் நான் வேலை செய்து கொண்டிருந்தேன். அந்த சமயத்தில் என்னுடன் வேறு யாரும் இல்லை, தனியாக தான் வேலை செய்தேன். விபத்து நடந்த போது நான் மட்டும் தான் அங்கிருந்தேனா என்றால் ஆமாம். அங்கு வேறு யாரும் இல்லை என்றால் சரிதான். சுந்தரசாமிக்கு நான் தான் தகவல் சென்னேனா என்றால் ஆமாம். நான் தகவல் சொல்லி தான் அவர் வந்தாரா என்றால் ஆமாம். அவர் வந்த போது மணி 8 இருக்கும். அவர் இறந்து போன நபரின் மகன் என்றால் சரிதான். நான் சுந்தரசாமி கடைக்கு சென்றிருந்த போது அவரிடம் சென்று அடிப்பட்டதை பற்றி சொல்லிவிட்டு நான் வீட்டிற்கு சென்றுவிட்டேன். நான் காவல் நிலையம் செல்லவில்லை. சம்பவம் நடந்த பின்னர் நான் எப்போதுமே காவல் நிலையம் சென்றதில்லை. என்னை போலீசார் சுந்தரசாமி வீட்டில் வைத்து கையொப்பம் வாங்கிச் சென்றார்கள். நான் இரண்டு கையொப்பங்கள் செய்து கொடுத்திருந்தேன். அப்போது காலை 8 மணி இருக்கும். என்னை போலீசார் விபத்து தொடர்பாக விசாரிக்கவும் இல்லை, வாக்குமூலமும் வாங்கவில்லை என்றால் சரிதான். விபத்து நடந்த இடம் வெளிச்சமாக தான் இருந்தது. இந்த வழக்கு விபத்து

சம்பவம் தொடர்பாக வேறு எதுவும் எனக்கு தெரியாது என்று சொன்னால் சரிதான். நான் விபத்தினை நேரில் பார்க்கவில்லை என்பதாலும், எனக்கு விபத்து பற்றி எதுவும் தெரியாது என்பதாலும், அ.சா.1 என் உறவினர் என்பதால் அவர் கேட்டுக் கொண்டதற்காக நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் தவறு.

Sd/−V.Monika
மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்
நீதித்துறை நடுவர்,
அன்னூர்.

| |
|---|
| Take down by me/before me in open Court, interpreted/read over to the Witness and admitted by the deponent to be correct. |